# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகம் (கூட்டிணைத்தல்)

**இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பியல் நிசாந்த த சில்வா அவர்களால் 2015, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *21 ஆம் சட்டமூலம்* ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகம் (கூட்டிணைத்தல்)**

**இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*உள, சமூக வேலை துறையில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே உள, சமூக வேலை தொழில்வாண்மையை அறிமுகஞ் செய்தல், விருத்தி செய்தல் சம்பந்தப்பட்ட கருமத்திற்காகவும் அத்துறையில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே உயர்ந்த தொழில்வாண்மை தரத்தைப் பேணுவதற்காகவும் தம்மை அர்ப்பணித்துள்ள தொழில்வாண்மையாளர் குழுமமொன்றினால் இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகம் என அறியப்படுவது மான பெயர்போன நிறுவகமொன்று இலங்கையில் தாபிக்கப்பட் டுள்ளதாதலாலும் :* முன்னுரை.

*1998 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவைகள் அமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின்கீழ் இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் முப்பத்தோராம் திகதி மேலே குறிப்பிட்ட நிறுவகம் தொண்டர் சமூக சேவை நிறுவகமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாதலாலும் :*

*1990 இன் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி சட்டம் மற்றும் 1995.09.17 ஆம் திகதிய 887/8 ஆம் இலக்க, வர்த்தமான பத்திரிகை அறிவித்தல் மூலம் பயிற்சிகளை வழங்கும் நிறுவகமொன்றாக பதிவு இலக்கம் பீ 20/0052 இன் கீழ் இந்நிறுவகம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாதலாலும் :*

*உள, சமூக வேலை தொழில்வாண்மையின் பொது அபிவிருத்திக்காகவும் அத்தகைய நிறுவகத்தின் உறுப்பினர்கள் இணங்கிக்கொண்ட யாப்புக்கு அமைய அத்தகைய நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தும் கருமத்திற்காக மேலே குறிப்பிட்ட நிறுவகம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் கூட்டிணைப்பதற்காக நிறுவகத் தினால் விசேட முன்மொழிவு இணக்கத்துடன் அங்கீகரிக்கப் பட்டுள்ளதாதலாலும் :*

2-PL 009372 -650 (2015/11)

அத்தகைய நிறுவகம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் நிறுவப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அந்நிறுவகம் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை உள, சமூக வேலை தொழில்வாண்மை நிறுவகம்" எனும் பெயரின்கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதோடு, அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டாயிருத்தலும் வேண்டும். இலங்கை உள, சமூக வேலை தொழில் வாண்மை நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) தரமான உள, சமூக வேலைத் திட்டத்தின் தரத்தன்மையை மேலோங்கச் செய்தல் மற்றும் உள, சமூக வேலை தொழிலில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களின் தொழில் ரீதியான கோட்பாடுகள், கௌரவம், உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமை என்பவற்றின் மேம்பாடு, போசனை மற்றும் பாதுகாப்பு ;

(ஆ) உள, சமூக வேலை தொழில்வாண்மையாளரின் அறிவுத் திறமை மற்றும் எண்ணப்பாங்கு என்பவற்றை முன்னேற்றகரமாக்குவதற்கு அவசியமான உள, சமூக தொழில் கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுத் துறையில் மூலோபாயங்களை அறிமுகப்படுத்தலும் அதன் மூலம் சமுதாய அபிவிருத்தி அத்துடன் வலுப்படுத்தல் ;

(இ) சமூக அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்து பேணிவருதல் மற்றும் அதனோடு இணைந்த புதிய சமூக கொள்கைகளை அறிமுகஞ் செய்வதற்கு உதவுதல் ;

(ஈ) உள, சமூக வேலை சம்பந்தப்பட்ட தொழிலைப் பேணி வருகையில், தொழில் ரீதியான கோட்பாடுகள் மற்றும் தரத்தை நிர்ணயிக்கையில், மிக முக்கிய செயற்பொறுப்பை ஈடேற்றும் ஆற்றலுள்ள ஒரேயொரு முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக இலங்கையில் உள, சமூக வேலை துறையில் ஈடுபடும் அனைத்து உறுப்பினர்களும் அத்தகைய தொடர்புகளின் ஒன்றிணைதல்;

(உ) நிறுவனத்தின் சுபகருமங்கள் மற்றும் நன்மை கருதி பொதுமக்கள் நலனோம்பு நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்வதற்காக நிறுவகத்தின் உறுப்பினர்களிடையேயும் வேறு ஒத்த தொழில்வாண்மையாளர் மற்றும் நிறுவனங்களுக்கிடையே நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை விருத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ;

(ஊ) உள, சமூக வேலை தொழில்வாண்மை பற்றி நன்றாக அறிந்த தகைமைகளைக் கொண்டவர்களாக உருவாக்குவதற்காக உள, சமூக வேலை தொழில்வாண்மையாளர்களாக ஆக்கும் சாத்தியக்கூறு உடையவர்களுக்கு ஏற்புடைய மற்றும் இன்றைய தகவல்களை வழங்குதல் ;

(எ) நிறுவகத்தின் உறுப்பினர்களின் தொழில் ரீதியான அவசியப்பாடுகள், உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் ;

(ஏ) தொழில் ரீதியான உள, சமூக வேலை சேவையைப் பேணிவரும் தொழில்வாண்மையாளர்கள் பற்றிய பதிவேடொன்றைத் தயாரித்து பேணி வருதல் ;

(ஐ) தொழில் ரீதியான உள, சமூக வேலையைப் பேணிவரும் தொழில்வாண்மையாளர்களின் சேவை வசதிகளை மேம்படுத்தும் செயற்பாட்டில் அதற்கு அவசியமான சட்டரீதியான கட்டளைகளை வெளியிடல், அவசியமான சட்ட ரீதியான யாப்பொன்றை அறிமுகஞ் செய்தலும் அதற்கு இசைவான உரிமைகள் மற்றும் சமூக பொறுப்புக்களை பாதுகாத்துப் பேணிவருதலும் ;

(ஒ) இலங்கையிலும் அதற்கு வெளியிலும் காணப்படுகின்ற தொழில்வாய்ப்புகள் தொடர்பான தகவல்களை உறுப்பினர்களுக்கு வழங்கல் ;

(ஓ) உள, சமூக வேலை தொழில்வாண்மை யாது என்பது பற்றியும் அது ஏன் தனித்தன்மைவாய்ந்ததோர் சமூக சேவையாகும் என்பது பற்றியும் பொதுமக்களுக்கு அறிவூட்டல் ;

(க) இலங்கை அதேபோன்று வெளிநாடுகளிலுள்ள உறுப்பினர்களிடையே உள்ளக தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் வாய்ப்புகளை உருவாக்கி அவற்றை இணையத்தளத்துடன் இணைக்கும் நடைமுறையொன்றை உருவாக்கல் ;

(ங) தொழில் ரீதியான உள, சமூக வேலை சேவைகளை அதிக வலுவூட்டுவதற்காக உறுப்பினருக்கென ஆராய்ச்சி நடவடிக்கைகள், கருத்திட்டங்கள் மற்றும் வேறு அதேபோன்ற நடவடிக்கைகளுக்கு வாய்ப்புக்களையும் வசதிகளையும் வழங்குதல் ;

(ச) உள, சமூக வேலை முறையை உபயோகிப்பவர்களுக்காக தொழில்சார் தரங்களை அறிமுகஞ் செய்தலும் அவர்களுக்கு தொழில்சார் நடவடிக்கைகளில் அத்தகைய தரங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்தலும் ;

(ஞ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அவற்றில் ஏதேனுமொன்றை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் உரிமை, சிறப்புரிமை வசதிகள் தொழில்சார் சங்கங்களுக்கு ஏற்புடையவாறு விருத்தி செய்யும் நோக்குடன் அரசுடனுடனும் சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபடுதல் ;

(ட) உள, சமூக வேலை மூலமாக சமூக மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசிற்கும் அரச அங்கீகாரம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எமது நிறுவக உறுப்பினர்களால் தொழில் ரீதியான சிறப்புச் சேவைகளை வழங்குவதற்கு வாய்ப்புக்களை உருவாக்கல் ;

(ண) உள, சமூக வேலை தொடர்பாக அக்கறை உடையவர்களுக்காக, தரமான செயலமர்வுகள், பாடநெறிகள், மாநாடுகள், கருத்திட்டங்கள் மற்றும் பரீட்சைகளை அறிமுகஞ் செய்து பேணிவருதலும் அவசிய மட்டத்தை அடைபவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதலும் ;

(த) அனைத்து சமூக அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் புதிய சமூக கொள்கைகளை அறிமுகம் செய்தல் ;

(ந) இலங்கையில் உள, சமூக வேலை தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் சுபகருமங்களின் விருத்தி கருதி அவசியமான ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :-

(அ) இந்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் நிதிகளைத் திரட்டவும், காசாகவோ பொருளாகவோ அளிப்புக்கள் மற்றும் நன்கொடைகளைப் பெறலும், ஒப்பப்பணங்களைப்பரிந்து கேட்டு பெற்றுக்கொள்ளலும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான ஏதேனும் முறையில் கொள்ளவும் வைத்திருக்கவும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும் அல்லது கொடுக்கவும், விற்பனை செய்யவும் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களுக்கு அவசியமான அல்லது வசதியான ஏதேனும் கட்டிடத்தை நிர்மாணிக்கவும், பேணவும், மாற்றவும் ;

(இ) வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவும், தொழிற்படுத்தவும், மூடவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிக் கடன் பெறவும் அல்லது பணம் திரட்டவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை 5 ஆம் பிரிவின் கீழ் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்றுச் சபை பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்யவும் ;

(உ) எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தால் அளிக்கப்படும் சேவைகளுக்கு கட்டணங்கள் அறவிடுவதற்கும் ;

(எ) ஆளொருவரை கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக மீளவும் அனுமதிப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தை அறவிடுவதற்கும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் தொழிலுக்கு அமர்த்துவதற்கும், பதவி நீக்கம் செய்வதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் செலுத்துவதற்கும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவமும், கட்டுப்பாடும், நிர்வாகமும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய பதவிதாங்குநர்களையும் அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட நிறைவேற்றுப் பேரவை ஒன்றுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பேரவையில் பதவி வகித்த உறுப்பினர்கள் நிறுவகத்தின் முதலாவது நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர்களாகக் கருதப்படல் வேண்டும்.

**6**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திற்கு நேர்முந்திய தினத்தில் நிறுவகத்தின் உறுப்பினர்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக முறையாக சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோர் ஆளினதும் பெயர் பதியப்பட வேண்டிய பதிவேடொன்றைக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுச் சபை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். *உறுப்பினர்களின் பெயர்ப் பதிவேடு.*

**7**. (1) கூட்டுத்தாபனத்தால் காலத்திற்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குக்களைக்கொண்டு பின்வரும் கருமங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும்:- *கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கம், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், அவர்களை விலக்குதல் அல்லது பதவிதுறத்தல் ;

(ஆ) நிறைவேற்றுப் பேரவையினைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர்கள் பதவிவிலகல், பதவியிலிருந்து அகற்றப்படுதல், பதவியை வறிதாக்கல் அத்துடன் நிறைவேற்றுச் சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் நடத்தை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும், சேவையாளர்களினதும் தத்துவங்கள், கடமைகள், பணிகள், அவர்களின் நியமனம், பதவிநீக்கம், பதவியை முடிவுறுத்தல் ;

(ஈ) நிறைவேற்றுப் பேரவையினதும் கூட்டுத்தாபனத்தினதும் அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்திலும் நிறைவேற்றுப் பேரவையிலும் உறுப்பாண்மைக்கான தகைமையும் தகைமையீனமும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நேர்முந்திய நாளன்று வலுவில் உள்ள நிறுவகத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வரை இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அவ்விதிகள் இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி ஒன்றைப்போல அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**8**. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து - கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம் என்பது.

(அ) நிறுவகத்தின் எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் ;

(ஆ) நிறுவகத்தின் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் மற்றும் நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் ;

(இ) நிறுவகத்தின் எல்லா புத்தகங்களும், கணக்குகளும், ஆவணங்களும் ;

கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், (1) ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றியும் -

(அ) நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், கட்டணங்களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும் ;

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்துக்குள்ள எல்லா பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகச் செய்துகொள்ளப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளில் இருந்து தொடரப்பட்ட வழக்கொன்றில் அல்லது நிறுவகத்தினால் அல்லது அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு இதன்பின்னர் கூட்டுத்தாபனத்தால் அல்லது அதற்கெதிராக தொடரப்பட்ட வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை ஒன்றாகக் கருதுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் நிதியம்.**

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், மானியக்கொடைகள், நன்கொடைகள் காசாக அல்லது பொருளாக உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் என்றவகையாகப் பெறப்படும் எல்லாப் பணங்களையும் அது கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பேரவையினால் தீர்மானிக்கக்கூடியவாறாகக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குப் பொருத்தமான ஏதேனும் முறையில் முதலீடு செய்யப்படுதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**கணக்காய்வும், கணக்குகளும்.**

**10.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டிலும் குறைந்தபட்சம் ஒருதடவையாவது நிறைவேற்றுப்பேரவையினால் நியமிக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**நிறுவகத்தினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.**

**11.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நிறுவகத்துக்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் அல்லது கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவனத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஒப்பப்பணங்களும் கட்டணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**12.** கூட்டுத்தாபனமானது அதன் உறுப்பினர்களிடையே உயர்தொழில்சார் தராதரத்தையும் ஒழுக்கத்தையும் பேணுவதற்காக காலத்துக்குக்காலம் ஏதேனும் குழுவை நியமிப்பதற்கும் அவசியமெனக் காணப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும். *குழுக்கள் நியமிப்பதற்கான அதிகாரம்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளர் அல்லது நிறைவேற்றுப்பேரவை முறையாக அதிகாரமளிக்கப் பட்டவாறான நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் ஒருவரினதும் நிறைவேற்றுப்பேரவையின் இன்னோர் உறுப்பினரினதும் முன்னிலையில் அன்றி கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதமான சாசனத்திலும் பொறிக்கப்படலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக அவரால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஆண்டு ஒப்பப்பணத்தின் தொகையை விஞ்சிய ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது. *உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும் அவர்கள்மூலம், அவர்களில் இருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருகின்றவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது. *குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்